டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 23.10.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 104 | Madurai | Online Edition

# மத்தியப் பிரதேச மாநிலம் போபாலில் மீன்வள முதலீட்டாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மாநாடு நடைபெறவுள்ளது

புது தில்லி, அக்.22

மத்தியப் பிரதேச மாநிலம் போபாலில் 2026 அக்டோபர் 23 அன்று மீன்வள முதலீட்டாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மாநாடு 2026-ஐ நடத்துவதற்கு மத்திய அரசின் மீன்வளத்ருதுறையும், மத்தியப் பிரதேச மீன்வளத்துறையும் ஏற்பாடு செய்துள்ளன.

உள்நாட்டு மீன்வள உற்பத்திக்கும், முதலீடு, பதனப்படுத்துதல், குளிரூட்டல் உள்கட்டமைப்பு, மதிப்புக்கூட்டல், ஏற்றுமதி சந்தைகள் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை வலுப் படுத்துவது இம்மாநாட்டின் நோக்கமாகும்.

இது உற்பத்தியை மட்டும் நோக்கமாகக் கொண்ட அணுகு முறையில் இருந்து மாறாக ஒருங்கிணைந்த மதிப்பு சார்ந்த மாதிரியை நோக்கி செல்ல ஊக்குவிக்கிறது.

மீனவர்கள், மீன் விவசாயிகள் ஆகியோருக்கான சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதிலும், வருவாயை அதிகரிப்பதிலும் இது கவனம் செலுத்துகிறது.

இம்மாநாட்டில் முதலீட்டாளர்கள், ஏற்றுமதியாளர்கள், மீனவர்கள், மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீன் விவசாயிகள், மீன்வளக் கூட்டுறவு சங்கங்கள், மீன் விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகள், தொழில் முனை வோர்கள், புத்தொழில் நிறுவனங்கள், பதனப்படுத்துவோர்கள், நிதி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், இதர பங்கு தாரர்கள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

# விவசாய நிலத்தை பாதுகாப்போம் (கேத் பச்சாவோ அபியான்) நாடளாவிய பிரச்சாரம் துவக்கம்

கள்ளக்குறிச்சி, அக்.22

இந்திய அரசின் வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் சார்பில் ஒருங்கிணைந்த தேசிய முயற்சியின் மூலம் சமச்சீர் உரமிடுதல், மண் ஆரோக்கிய மேலாண்மை, இயற்கை வளப் பாதுகாப்பு, நிலையான ஊட்டச்சத்து மேலாண்மை நடைமுறைகள் மற்றும் இயற்கை விவசாயத்தை விரைவாக நடைமுறைப்படுத்துதல் முதலிய நோக்கங்களுடன் அக்டோபர் 22 முதல் நவம்பர் 30 வரை 'கேத் பச்சாவோ அபியான்' என்ற நாடளாவிய 'விவசாய நிலத்தை பாதுகாப்போம் (ராபி பருவம் - 2026)' பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்படுகிறது.

இதன் துவக்க விழா கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலத்தில் 22.10.26 அன்று வேளாண் மண்டல இணை இயக்குனர் பேபிகலா தலைமையில், காளசமுத்திரம் வேளாண் அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் மொ.ச.கண்ண தாசன், முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மண்ணியல் தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் மங்களதேவி, சின்னசேலம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் புஷ்பவல்லி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் சாமுண்டீஸ்வரி உள்ளிட்ட வல்லுனர்கள் குழு, தொழில்நுட்ப அறிவுரைகளையும், விவசாய நிலத்தை பாதுகாப்பதற்கு குறித்த அறிவியல் பூர்வ நடைமுறைகளையும் விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினர்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, விவசாய நிலத்தை பாதுகாப்பதை வலியுறுத்தி, பேரணியும் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் 60 விவசாயிகள் பங்கேற்றனர்.

மேலும் விபரங்களுக்கு முனைவர் மொ.ச.கண்ணதாசன், இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், ICAR-TANUVAS-வேளாண் அறிவியல் நிலையம் (விழுப்புரம் II), காளசமுத்திரம், கள்ளக்குறிச்சி - 606 301. அலைபேசி எண் : 94872 58877 தொடர்பு கொள்ளலாம்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மண் நல மேலாண்மை பயிற்சி

விழுப்புரம், அக்.22

விழுப்புரம் மாவட்டம், காணை வட்டாரம், அரும்புளி கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) பாலமுருகன் ஆலோசனை படி வேளாண்மைத் துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் மண் நல மேலாண்மை பற்றி பயிற்சி நடத்தப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் விஜயசாரதி வரவேற்புரை அளித்தார்.




இப்பயிற்சிக்கு வேளாண்மை அலுவலர் லிங்கேஸ்வரன் முன்னிலை வகித்தார். அதனைத் தொடர்ந்து பயிர்களின் தேவை மண்ணின் வளநிலை மற்றும் சுற்றுச்சூழல் காரணி களுக்கு ஏற்ப அனைத்து அத்தியவாசிய ஊட்டச்சத்துகளையும் சரியான விகிதத்தில் வழங்குதல் பற்றி அறிவுறுத்தினார் மற்றும் வேளாண்மை துறை திட்டங்களைப் பற்றிய விரிவாக கூறினார். விளை நிலம் காப்போம் இயக்கம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். விழுப்புரம் தலைமை இடத்தில் அமைந்துள்ள மண் மற்றும் நீர் பரிசோதனை ஆய்வகத்தில் இருந்து ஜெரிகாட் மெர்ஸி, வேளாண்மை அலுவலர் மண் பரிசோதனை மற்றும் நீர் பரிசோதனை செய்தல் விதமாக விரிவாக விளக்கம் அளித்தார். சமச்சீர் உரங்களை தேவைக் கேற்ப பயன்படுத்தும் தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சதீஷ் நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் சிவானந்தம் ஏற்பாடு செய்தார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கட்டணமின்றி உயிர்மச்சான்று பெற விண்ணப்பிக்கலாம்

திருச்சி, அக்.22

தேசிய உயிர்ம உற்பத்தி திட்டம் (NPOP), பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம் (பங்களிப்பு உத்திரவாத திட்டம் (PKVY-PGS) மற்றும் இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMNF) தெரிவிப்பதென்னவெனில்,

தமிழ்நாடு அரசு 2026-2027ம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் உயிர்ம விவசாயத்தினை ஊக்குவிக்கும் பொருட்டும், உயிர்ம விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் உயிர்மச்சான்று பெறுவதற்கான பதிவுக் கட்டணத்தை தளர்த்தி, கட்டணமின்றி பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உயிர்ம வேளாண்மையில் ஈடுபட்டு இது நாள் வரை உயிர்மச்சான்று பெறாத விவசாயிகள், தேசிய உயிர்ம உற்பத்தி திட்டம் (NPOP) அல்லது பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம் (பங்களிப்பு உத்திரவாத திட்டம் – ; PKVY-PGS) அல்லது இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMNF) மூலமாக இவ்வருடம் பதிவு செய்து கட்டண மின்றி உயிர்மச் சான்று பெற்றுக் கொள்ளலாம்.

தேசிய உயிர்ம உற்பத்தி திட்டத்தில் (NPOP) தனிநபராக உயிர்மச் சான்று பெற விரும்பும் விவசாயிகள் தங்களுடைய புகைப்படம் இரண்டு எண்கள், ஆதார், பேன் கார்டு, ஆகியவைகளின் இரண்டு நகல்கள், சிட்டா நகல், நில வரைபடம், நீர் மாதிரி மற்றும் மண் மாதிரி ஆய்வு முடிவுகள் கொண்டு விண்ணப்பம் செய்யலாம்.

பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம் (பங்களிப்பு உத்திரவாத திட்டம் – PKVY-PGS) அல்லது இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMNF) மூலமாக உயிர்மச்சான்று பெற விரும்பும் விவசாயிகள் ஒரே கிராமத்தில் அல்லது அருகாமையில் உள்ள கிராமத்தை சேர்ந்த உயிர்ம விவசாயம் செய்யும் விவசாயிகள் ஒரு குழுவாக அமைத்து எவ்வித கட்டணமும் இல்லாமல் பங்களிப்பு உத்திரவாத திட்டத்தில் உயிர்மச் சான்று

பெறலாம். இத்திட்டத்தின் கீழ் உயிர்மச் சான்று பெற்ற பொருட்களை உள்நாட்டு அளவில் விற்பனை செய்ய முடியும். குறைந்தபட்சம் 5 விவசாயிகள் முதல் 100 விவசாயிகள் வரை இணைந்து குழுவாக அமைத்து உயிர்மச் சான்றுக்கு பதிவு செய்ய வேண்டும்.

பங்களிப்பு உத்தரவாத திட்டத்தில் விவசாயிகள் குழுவாக பதிவு செய்ய தங்களுடைய புகைப்படம் இரண்டு எண்கள், ஆதார், பேன் கார்டு, ஆகியவைகளின் இரண்டு நகல்கள், சிட்டா நகல், நில வரைபடம், நீர் மாதிரி மற்றும் மண் மாதிரி ஆய்வு முடிவுகள் கொண்டு விண்ணப்பம் செய்யலாம். பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் (பங்களிப்பு உத்திரவாத திட்டம் – PKVY-PGS) தனிப்பட்ட விவசாயி உயிர்மச் சான்று பெற இயலாது. குழுவாக மட்டுமே பதிவு செய்ய இயலும். இத்திட்டத்தில் கட்டணமின்றி எளிமையான முறையில் பதிவு செய்வதால் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். தேசிய அங்கக வேளாண்மை மையம் மற்றும் மண்டல குழுக்கள் முறையாக கண்காணிப்பு செய்து, பங்கேற்பாளர் உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யும் மற்றும் விற்பனை பொருட்களை ஜெய்விக் பாரத் என்னும் இணைய தளத்திலும் பதிவேற்றம் செய்து அகில இந்திய அளவில் வேளாண் வணிகத்தில் ஈடுபட முடியும்.

மேலும் விவசாயிகள் உயிர்மச் சான்றளிப்பு குறித்த தங்கள் சந்தேகங்களை தெளிவு பெற திருச்சிராப்பள்ளி மாவட்ட புத்தூர் நான்கு ரோட்டில் உள்ள விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என திருச்சிராப்பள்ளி மாவட்ட, விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# பருத்தியில் ஆழச்சால் அகலப்பாத்தி முறை குறித்து வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம்



திருச்சி, அக்.22

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவிகள் மா.ஹரிணி, அ.பராசக்தி, மு.பிரியதர்ஷினி, சே.பிரியதர்ஷினி, நா.ஸ்ரீவித்யா, பா.சுபர்ணா, ஹ.தஸ்லீமா நஸ்ரின், ச.வைஷ்ணவி, நா.ச.விவிதாஸ்ரீ மற்றும் ச.ஞா.யுவஸ்ரீ ஆகியோ ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, மாணவிகள் தி.ரெங்கநாதபுரம் கிராம விவசாயிகளுக்கு பருத்தியில் அகலப் படுக்கை மற்றும் வாரிப் பள்ளம் முறை (Broad Bed and Furrow Method) குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

இம்முறையில், பருத்தி சாகுபடியில் நிலத்தை அகலப் படுக்கையாக உருவாக்கி, நடுவில் வாரிப் பள்ளம் அமைத்து, மழை நீர் மற்றும் பாசன நீரைச் சேமித்து பயிருக்குத் தேவையான ஈரப்பதத்தை அளிக்கும் முறை குறித்து விளக்கப்பட்டது. படுக்கையின் அகலம் 90-120 செ.மீ., வாரிப் பள்ளத்தின் அகலம் 30-45 செ.மீ. மற்றும் உயரம் 15-20 செ.மீ. இருக்க வேண்டும் என்றும், இதனால் மழைநீர் சேமிக்கப்படும், மண்ணின் ஈரப்பதம் நீண்ட நேரம் நிலைத்திருக்கும், களைகளின் வளர்ச்சி குறையும், வேர் வளர்ச்சி அதிகரிக்கும் மற்றும் நீர்ப்பாசனச் செலவு குறையும் என்றும் எடுத்துரைத்தனர்.

மேலும், இம்முறைக்குத் தேவையான டிராக்டர், மண் தயாரிப்புக் கருவிகள், அளவுகோல் போன்றவை குறித்தும், செய்முறை படிப்படியாகவும், கவனிக்க வேண்டியவை குறித்தும் மாணவிகள் விவசாயிகளுக்கு விரிவாக விளக்கினர். மழையை நம்பியுள்ள பகுதிகளில் இம்முறை மிகவும் பயனுள்ளதாகவும், சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு ஏற்றது என்றும் எடுத்துரைத்தனர். இப்பயிற்சியின் மூலம் விவசாயிகள் அறிவியல் முறையில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற முடியும் என்ற விழிப்புணர்வைப் பெற்றனர்.

# Rithvik Pipe

IS 4985 : 2021

IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW

isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID

BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நவீன வேளாண்மையில் பொறியியல் துறையின் பணிகள்

திருப்பூர், அக்.22

விவசாய உபகரணங்கள் துறையில் உற்பத்தி, விற்பனை, வாடகைக்கு விடுதல் மற்றும் பழுது பார்த்தல் போன்ற பல்வேறு வகையான சிறந்த தொழில் வாய்ப்புகள் உள்ளன. முக்கிய தொழில் வாய்ப்புகள் உபகரணங்கள் வாடகை விவசாய உபகரணங்கள் வாடகை மையம் என்பது தற்போதைய சூழலில் மிகச் சிறந்த மற்றும் அதிக லாபம் தரக்கூடிய ஒரு கிராமப்புற தொழில் வாய்ப்பாகும். சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளால் விலை உயர்ந்த டிராக்டர்கள் அறுவடை இயந்திரங்கள் மற்றும் கலப்பைகளை வாங்க முடியாது. எனவே, குறைந்த வாடகையில் இத்தகைய உபகரணங்களை வழங்கும் மையம் தொடங்குவது நல்ல லாபம் தரும். அரசின் மானியத் திட்டங்கள் தமிழக அரசின் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் இந்த வாடகை மையங்களை அமைக்க 40% முதல் 80% வரை மானியங்கள் வழங்கப்படுகின்றன. தமிழக அரசு வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத்திட்டத்தின் கீழ் வாடகை மையங்கள் அமைக்க நிதியுதவி அளிக்கிறது.

**கிராம அளவிலான வாடகை மையங்கள் :** சிறிய அளவிலான மையங்கள் அமைக்க 80% வரை மானியம் வழங்கப்படுகிறது.

**வட்டார அளவிலான பெரிய மையங்கள் :** ரூ.25 லட்சம் வரையிலான திட்டங்களுக்கு 40% மானியம் (அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை) தனிநபர்கள், விவசாய சுயஉதவிக் குழுக்கள் அல்லது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

**தேவையான இயத்திரங்கள் :** உங்கள் பகுதியில் பயிரிடப்படும் பயிர்களுக்கு ஏற்ப (நெல், கரும்பு, நிலக்கடலை, காய்கறிகள்) இயந்திரங்களைத் தேர்வு செய்ய வேண்டும்

**தொடக்க நிலை :** டிராக்டர், ரோட்டாவேட்டர். கலப்பை மற்றும் பலர் அடுத்த கட்ட நிலை களையெடுப்பாள். நெல் நாற்று நடவு இயந்திரம் மற்றும் நெல் அறுவடை இயந்திரம்.

**நவீன தொழில்நுட்பம் :** பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதற்கான அவசியம்.

**வணிக மாதிரி மற்றும் லாபம் மணி நேர வாடகை :** டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரங்களுக்கு மணிநேர அடிப்படையில் வாடகை வசூலிக்கலாம்.

**பரப்பளவு வாடகை :** ஒரு ஏக்கருக்கு ரூபாய் என்ற கணக்கிலும் செய்தல், அறுவடை செய்தல்) சேவை கட்டணம் சேர்த்துக் கொள்ளலாம்.

**தொழில் திட்ட அறிக்கை :** நீங்கள் வாங்க உத்தேசித்துள்ள இயந்திரங்களின் பட்டியல் மற்றும் பட்ஜெட்டைத் தயார் செய்யுங்கள். தமிழக அரசின் உழவன் செயலி மூலமாகவோ வட்டாரத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்தை அணுகியோ மானியத்திற்குப் பதிவு செய்யலாம். டிஜிட்டல் விளம்பரம் உங்களது வாடகை மையத்தை செயலிகளில் இணைப்பதன் மூலம் சுற்றுவட்டார விவசாமிகளை எளிதில் சென்றடையலாம்.

**உபகரணங்கள் விற்பனை மற்றும் உதிரிபாகங்கள் கடை :** விவசாய இயந்திரங்கள். கைக்கருவிகள். தெளிப்பான்கள் மற்றும் அவற்றுக்கான உதிரி பாகங்களை விற்பனை செய்யும் கடை வைக்கலாம். விவசாய உபகரணங்கள் மற்றும் உதிரியாகங்கள் விற்பனை கடை என்பது கிராமப்புறங்கள் மற்றும் பகுதி-நகரப் பகுதிகளில் ஒரு மிகச்சிறந்த, எப்போதும் தேவையுள்ள ஒரு தொழில் வாய்ப்பாகும். இந்தத் தொழிலை வெற்றிகரமாகத் தொடங்கு வதற்கான முழுமையான வழிகாட்டி மற்றும் திட்டமிடல் இதோ : 1. வணிகம் மாதிரி நீங்கள் மூன்று வழிகளில் இந்தத் தொழிலைச் செய்ய முடியும்.

**சில்லறை விற்பனை :** விவசாயிகளுக்குத் தேவையான சிறிய உபகரணங்கள் மற்றும் உதிரிபாகங்களை நேரடியாக விற்பது.

**டீலர்ஷிப் :** முன்னணி நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற டீலராக மாறி பெரிய இயந்திரங்களை விற்பது.

**உதிரி பாகங்கள் மற்றும் பழுது நீக்கம் :** இயந்திரங்களை விற்காமல், அவற்றுக்கான ஸ்பேர் பார்ட்ஸ் மற்றும் சர்வீஸ் மட்டும் செய்து தருவது (இதற்கு முதலீடு குறைவு, லாபம் அதிகம்).

**2. முக்கிய பொருட்கள் உங்கள் கடையில்**

எப்போதும் இருக்க வேண்டிய பொருட்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

**முக்கிய உபகரணங்கள் :** கைக்கருவிகள் : மண்வெட்டி, களைக் கொத்து, அரிவாள், சுத்தரிக்கும் கருவிகள்.

**இயந்திரங்கள் :** பவர்டில்லர், களை எடுக்கும் இயந்திரம், புல் வெட்டும் இயந்திரம்.

**தெளிப்பான்கள் :** பேட்டரி ஸ்பிரேயர், கை ஸ்பிரேயர், பவர் ஸ்பிரேயர்.

**நீர் மேலாண்மை :** சொட்டு நீர் பாசனக் கருவிகள், பிவிசி பைப்ஸ், மோட்டார் பம்புகள்.

**உதிரி பாகங்கள் :** அனைத்து வகையான இன்ஜின்களுக்கான ஏர் ஃபில்டர், ஆயில் ஃபில்டர், ஸ்பார்க் பிளக் ஸ்பிரேயர் பம்புகளுக் கான வார்கள், கன், ஹோஸ் பைப். பவர்டில்லர் மற்றும் வீடர் களுக்கான பிளேடுகள் மற்றும் பெல்ட்டுகள் 4 ஆயில், கியர் ஆயில் மற்றும் கிரீஸ்.

**3. தேவையான முதலீடு**

**சிறிய அளவிலான கடை :** 12 லட்சம் முதல் 5 லட்சம் வரை (கைக்கருவிகள், ஸ்பிரேயர்கள் மற்றும் ஸ்பேர் பார்ட்ஸ் மட்டும்).

**நடுத்தர அளவிலான கடை :** 5 லட்சம் முதல் 15 லட்சம் வரை (சிறிய இயந்திரங்கள் மற்றும் கூடுதல் உதிரிபாகங்கள்).

**இலாப வரம்பு :** இயந்திரங்களுக்கு 10% முதல் 15% வரையும். உதிரிபாகங்களுக்கு 20% முதல் 40% வரையும் லாபம் கிடைக்கும்.

தகவல் : ***T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.***

# அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை மேற்கொள்வோர் கவனத்திற்கு...

கோயம்புத்தூர், அக்.22

கோயம்புத்தூரில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், நம்மாழ்வார் அங்கக வேளாண்மை ஆராய்ச்சி மையத்தில், அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை திருவிழா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு, தமிழ்நாட்டில் உள்ள அங்கக வேளாண்மையை நடைமுறையில் மேற்கொண்டு வரும் விவசாயிகளின் விவரங்களை சேகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, அங்கக வேளாண்மையை நடைமுறையில் மேற் கொண்டு வரும் விவசாயிகள், https://forms.gle/JscDVyw38 TQj7R4C7 என்று கூகுளில் டைப் செய்தால் ஒரு படிவம் கிடைக்கும். அந்த படிவத்தில் தங்களது விவரங்களை வழங்கு மாறு கேட்டு கொள்கிறோம்.

# மயில்களின் பெருக்கம் எதனால்? தெரியுமா?

விவசாய நிலங்களில் மயில்களின் எண்ணிக்கை அசுர வேகத்தில் அதிகரித்து வருவதால் விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி தமிழகத்தில் மட்டும் மயில்களின் எண்ணிக்கை 6 மடங்காக அதிகரித்தள்ளது.




## வனவிலங்குகள், பறவைகளால் தொல்லை?



காட்டுபன்றி, மலை மாடுகள், மயில், கிளி, மான், முயல் போன்றவற்றால் மக்காசோளம் முதல் சூரிய காந்தி பயிர் வரை பாதிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு இவை பெரும் சவாலாக உள்ளது. சாகுபடி செய்வதில் மயில்கள் கூட்டம் கூட்டமாக வந்து நாசம் செய்வதால் விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார நஷ்டத்தை ஏற்படுத்துகின்றன.

ஒரு காலத்தில் வனத்தில் (காடுகள்) தென்பட்ட இந்த பறவை இன்று கிராமப்புறங்களையும் தாண்டி நகரங்களில் உள்ள விவசாய நிலத்தையும் ஆக்கிரமித்துள்ளன. இந்த மாற்றத்திற்கு பின்னால் நரிகளின் அழிவு தான் முக்கிய காரணமாக இருக்கிறது.

### அது எப்படி? தெரியுமா?

இயற்கையின் உணவு சங்கிலியில் (FOOD CHAIN) ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒரு முக்கிய பங்கு உண்டு. அந்த வகையில் தான் மயில்களின் எண்ணிக்கை கட்டுக்குள் வைத்திருப்பதில் நரிகளின் பங்கு மிக முக்கியமானது.

நரிகளில் உல்ப் (WOLF) வகை பெரியது, பாக்ஸ் வகை (FOX) சிறியது. இந்தியாவில் வடமாநிலத்தில் தான் நரிகள் அதிகமாக உள்ளன. நரிகள் கூட்டம் கூட்டமாக வந்து வேட்டையாடும். அப்போது தான் மயில் இட்டு வைக்கும் முட்டைகளை உணவாக்கி கொள்ளும். பொதுவாக மயில் ஓடை, புதர், வேலி ஓரங்களில் தான் முட்டையிடும். அவற்றில் பெரும்பாலான முட்டைகள் நரிகள், காட்டு பூனைகள், ஓநாய் போன்ற விலங்குகள் வேட்டையாடி விடும். தற்போது அவைகள் அரிதாகி விட்டது. அதனால் மயில்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. இவை விளைநிலங்களில் முளைக்கும் விதைகள் முதல் மா, கொய்யா போன்ற பழ வகைகளையும் விட்டு வைப்பதில்லை.

அவற்றை கொத்தி கொத்தி சாப்பிடுவதால் விற்பனை செய்ய இயலாது. தற்போதைய சூழலில் நரிகள், காட்டு பூனைகள் இல்லாத சூழலில் மயில்களின் முட்டைகளுக்கு எவ்வித ஆபத்தும் இல்லை. இதுவே கடந்த சில ஆண்டுகளாக மயில்களின் எண்ணிக்கை பல மடங்காக பெருக்கமாகி விட்டது.

**மயில் ஒரு தேசிய பறவை?**

மயில் நமது நாட்டின் தேசிய பறவை என்பதால் வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவற்றிற்கு கடுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அவற்றை சுடவோ, வேட்டையாடவோ செய்தால் சட்டப்படி குற்றமாகும். அவற்றை நிலத்திலிருந்து விரட்டிட வேண்டும். ஒலிபெருக்கி மூலமாக சப்தம் வைத்து விரட்டலாம். அறுவடை நேரங்களில் கூலியாட்களை நியமித்து விரட்ட வேண்டும். மயில்களை விரட்டிட பல நாட்டு முறைகள் உள்ளன.

1) வயலை சுற்றி குறுக்கும் நெடுக்குமாக கயறு கட்ட வேண்டும்.

2) வரப்பு ஓரங்களில் அழுகிய முட்டை கரைசலை தெளிக்க வேண்டும்.

3) வரப்பை சுற்றி கலர்கலரன சேலைகளை கட்ட வேண்டும்.

4) சூரிய ஒளியில் இயங்கும் அலார மணி (சப்தம்) மூலமாக விரட்டிட வேண்டும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# மீன் பண்ணையை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருவாரூர், அக்.22

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரத்தில், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) கீழ், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் அப்துல்லா, ஆகாஷ், பாலாஜி, இனிய அஸ்வின் ஜெயசூர்யா, பெய்ஸல் செப்பர்டு, பிரித்திவிராஜ், சந்தோஷ், சத்திய சீலன், சுதர்சன், வினோத் குமார் ஆகியோர் கொல்லுமாங்குடியில் உள்ள மீன் பண்ணையை பார்வையிட்டனர்.




அப்போது, மீன் வளர்ப்புக்கான குளம் தயாரித்தல், தரமான மீன் குஞ்சுகளைத் தேர்வு செய்தல், தீவனமிடுதல், நீரின் தரத்தைப் பராமரித்தல் மற்றும் மீன் வளர்ப்பு மேலாண்மை முறைகள் குறித்து விளக்கமளிக்கத்தனர். மேலும், மீன்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்து மேலாண்மை, நோய்த் தடுப்பு முறைகள், நீர் மேலாண்மை மற்றும் மீன் அறுவடை நடைமுறைகள் குறித்துத் தெரிவித்தனர்.

மீன் வளர்ப்பின் மூலம் விவசாயிகளுக்கு ஏற்படும் கூடுதல் வருமான வாய்ப்புகள் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணைய முறையில் மீன் வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கமளித்தனர்.

இப்பார்வையின் வாயிலாக, மீன் வளர்ப்புத் தொழில்நுட்பங்கள், பண்ணை மேலாண்மை மற்றும் வேளாண்மையுடன் மீன் வளர்ப்பை ஒருங்கிணைக்கும் முறைகள் குறித்த நடைமுறை அறிவு மாணவர்களுக்கு வழங்கினர்.


கல்யாண்
ஜூ வ ல் ல ர் ஸ்
Toll Free No. 1800 - 4257333

# இப்கோ நானோ ஜிங்க் – ஒரு பார்வை

சென்னை, அக்.22

1% துத்தநாகம் (ரீஜ) கொண்ட இப்கோ நானோ துத்தநாகம், பயிர்களில் ஏற்படும் துத்தநாகக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய உதவும் நவீன நானோ திரவ உரமாகும்.

கிடைக்கும் அளவு – 100 மி.லி.

## நன்மைகள்




துத்தநாகக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய உதவுகிறது. ஆரோக்கியமான வேர் மற்றும் பயிர் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கிறது. மலர்ச்சி மற்றும் காய்/பழ உருவாக்கத்திற்கு உதவுகிறது. பயிர்களின் ஊட்டச்சத்து பயன்பாட்டுத்திறனை மேம்படுத்த உதவுகிறது. சுற்றுச்சூழல் அழுத்தங்களைத் தாங்கும் பயிர்களின் திறனை மேம்படுத்துகிறது. சிறந்த மகசூல் மற்றும் தரமான விளைச்சலைப் பெற உதவுகிறது.

## பயன்பாட்டு முறை

இலைவழித் தெளிப்பு : 10 லிட்டர் தண்ணீருக்கு 100 மி.லி. இப்கோ நானோ ஜிங்க் கலந்து பயிர்களில் தெளிக்கலாம்.

சொட்டுநீர்ப் பாசனம் : பயிரின் தேவைக்கேற்ப சொட்டு நீர்ப் பாசன முறையிலும் பயன்படுத்தலாம்.



# வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உலக உணவு தினம் 2026



கன்னியாகுமரி, அக்.22 வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உலக உணவு தினம் 2026 சிறப்பு நிகழ்வு உலக உணவு தினம் (World Food Day) என்பது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16 ஆம் தேதி கடைபிடிக்கப்படுகிறது. உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) 1945-இல் தொடங்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு, 2026-இன் உலக உணவு தினத்தின் கருப்பொருள் 'இன்று புதுமையைப் புகுத் துங்கள். நாளைய தினத்திற்கு ஊட்டமளியுங்கள்' என்பதாகும்.

புதுமையானது, பாரம்பரிய அறிவு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறைகளுடன் இணைந்து, எதிர்கால சந்ததியினருக்காக இந்தப் பூமியை பாதுகாப்பதோடு, போதுமான, பன்முகத்தன்மை வாய்ந்த, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவு கிடைப்பதை எவ்வாறு உறுதிசெய்ய முடியும் என்பதை இந்தக் கருப்பொருள் எடுத்துக்காட்டுகிறது. கன்னியா குமாரி மாவட்டம், திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உலக உணவு தினம் 16.10.26 காலை 10 மணி அளவில் நடைபெற்றது. வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் சா.சுரேஷ் துவக்கவுரையாற்றி உலக உணவு தினத்தின் நோக்கங்கள் மற்றும் முக்கியத்துவம் குறித்தும் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

முனைவர் ஜெ.செல்வி, உதவிப் பேராசிரியர் (உணவியல் மற்றும் சத்தியல் துறை) உணவு தினத்தின் கருப்பொருள் மற்றும் உலகளவில் நிலவும் பசி மற்றும் பட்டினியை முற்றிலுமாக ஒழிக்கவும், அனைவருக்கும் போதுமான உணவு கிடைப்பதை

உறுதி செய்யவும் இது விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது. ஊட்டச் சத்து மிக்க மாறுபட்ட உணவுகளைத் தேர்ந்தெடுப்பது மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவது பற்றி மக்களுக்கு எடுத்துரைக்கிறது. உணவை வீணாக்குவதைக் குறைத்து, இயற்கை வளங்களான மண், நீர் மற்றும் பல்லுயிர்களைப் பாது காக்க வலியுறுத்துகிறது. விவசாயிகளின் கடின உழைப்பைக் கவுரவிப்பதோடு, நிலையான விவசாய முறைகளை ஊக்கு விக்கிறது என்பது பற்றி எடுத்துரைத்தார்.

கன்னியாகுமாரி மாவட்டம் ஓய்வு பெற்ற கூடுதல் இணை இயக்குனர் (வேளாண்மை) கண்ணன், கூடுதல் இணை இயக்குனர் (தோட்டக்கலை ) நிசாமுதீன், வேளாண் இணை இயக்குனர் சத்திய ஜோஸ் மற்றும் வேளாண் இணை இயக்குனர் (தோட்டக்கலை) பாலகிருஷ்ணன் ஆகிய அனைவரும் சிறப்புரையாற்றி உலக உணவு தினத்தின் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தனர். உலக உணவு தின விழாவில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள், திட்ட உதவியாளர் (தொழில்நுட்பம்) பண்ணை மகளீர்கள், சுயஉதவிகுழு உறுப்பினர்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு உலக உணவு தினத்தின் நோக்கங்கள் மற்றும் முக்கியத்துவம் பற்றி தெரிந்து கொண்டு பயனடைந்தார்கள்.

## நெற்பயிரில் சூழலியல் கட்டமைப்பு வேளாண் சூழலியல் பகுப்பாய்வு குறித்த பண்ணைப்பள்ளி



சிவகங்கை, அக்.22

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் வேளாண்மை துறை – அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் நெற்பயிரில் சூழலியல் கட்டமைப்பு வேளாண் சூழலியல் பகுப்பாய்வு குறித்த பண்ணைப்பள்ளி குறித்த பண்ணைப்பள்ளி குறித்த விவசாயிகள் பயிற்சி பாட்டம் கிராமத்தில் 22.10.26 அன்று நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் தா.மலர்விழி, வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் நெல்பயிருக்கு நெல்

நுண்ணூட்டத்தின் பயன்பாடுகள், வேளாண் திட்டங்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். துணை வேளாண்மை அலுவலர் சுரேஷ், நுண்ணீர் பாசன பயன்பாடுகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினர் ராஜேஷ் நல்லையா, உழவு தொழில்நுட்பங்கள் மற்றும் நாற்றாங்கால் அமைத்தல் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சத்யா, அட்மா திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் நந்தினி பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். பாட்டம் கிராம விவசாயிகள் 25 பேர் கலந்து கொண்டனர்.




# விருதுநகர் அருகே பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி

விருதுநகர், அக்.22

விருதுநகர் ஒன்றியம், ஆவுடையாபுரம் கிராமத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி முகாம் நடந்தது.

விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவி வேளாண்மை துணை இயக்குநர் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பருத்தி சாகுபடி இயக்கம் மற்றும் விவசாயிகள் முன்னேற்றம் குறித்து சிறப்புரையாற்றினார். விருதுநகர் வேளாண்மை உதவி இயக்குநர் ராமசாமி முன்னிலை வகித்துச் சிறப்புரையாற்றினார். உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் அரிபுத்திரன், பருத்தியில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மகசூலை அதிகரிப்பது குறித்து பயிற்சி அளித்தார்.

பருத்தி சாகுபடியில் மண் வள மேலாண்மை, தரமான விதைத் தேர்வு, விதைப்புப் பருவம், பயிர் இடைவெளி, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, நீர் மற்றும் களைக் கட்டுப்பாடு, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, பயிர்ச் சுழற்சி, சரியான அறுவடை மற்றும் நார் தரத்தைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்து விளக்கப் பட்டது. மேலும், மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிடுதல், தேவைக்கேற்ப நீர்ப்பாசனம் செய்தல், பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த முறைகளைப் பின்பற்றுதல் ஆகிய வற்றின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது. இத்தொழில் நுட்பங் களைக் கடைப்பிடிப்பதன் மூலம் சாகுபடிச் செலவைக் குறைத்து, பருத்தி மகசூல் மற்றும் நாரின் தரத்தை மேம்படுத்தி, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த முடியும் என தெரிவிக்கப்பட்டது.

முகாமிற்கான ஏற்பாடுகளை விருதுநகர் வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ராஜேஷ் மற்றும் துணை வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர் நாராயணன், உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள் சுரேஷ், சதீஷ்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

# விளைநிலம் காப்போம் இயக்கம் முகாம்

மதுரை, அக்.22

மதுரை மாவட்டத்தில் விளைநிலம் காப்போம் இயக்கம் நேற்று வாடிப்பட்டி வட்டாரத்தில் குட்லாடம்பட்டி கிராமத்தில் வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) தா.மேரிஜரின் ஆக்னிட்டா

தலைமையில் துவக்கி வைக்கப்பட்டது. விளைநிலம் காப்போம் இயக்கம் நாடு முழுவதும் 22.10.26 முதல் 30.11.26 வரை நடைபெறவுள்ளது.

மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் 30.11.26 வரை நடைபெறுகிறது. இந்த முகாம்களில் பங்குபெற்று பயன் பெற மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பெ) அ.இராணி கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த முகாம்களில் விளைநிலங்களை பாதுகாத்து வேளாண் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்கு பின்வரும் விழிப்புணர்வு செய்திகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இரசாயன உரங்களைச் சமச்சீராகப் பயன்படுத்துதல், பசுமை அமோனியா மற்றும் உயிரியல் இடுபொருட்களின் பயன்பாட்டை அதிகரித்தல், நீர் பாதுகாப்புமற்றும் நீர் மேலாண்மை, பயிர் பல்வகைப்படுத்தல், ஊடுபயிர் சாகுபடி மற்றும் பொருத்தமான பயிர்கள். ரகங்களைத் தேர்வு செய்தல், நெல் தரிசு நிலங்களைத் திறம்படப் பயன்படுத்துதல், இயற்கை வேளாண்மையை ஊக்கு வித்தல், ஒருங்கிணைந்த பண்ணைய முறையைப் பின்பற்றுதல், விவசாயிகளின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி, மறுசீரமைப்பு வேளாண்மை நடைமுறைகள் உள்ளிட்ட மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்த வயல்வெளிச் செயல் விளக்கங்கள், வேளாண் இயந்திரமயமாக்கல், பயிர்க்கழிவு மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, மண்வளம் மற்றும் மண் ஆரோக்கிய மேலாண்மை, காலநிலை மாற்றத்தைத் தாங்கும் வேளாண்மை, எண்ணெய் வித்துப்பயிர்கள் மற்றும் பயறு வகைகளின் சாகுபடியை ஊக்குவித்தல், விவசாயிகளுக்கான அடையாள அட்டைகளை உருவாக்குதல், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) குறித்த விழிப்புணர்வு, வர்த்தக ஒப்பந்தங்களால் விவசாயிகளுக்குக் கிடைக்கும் பயன்கள், தகுதியுள்ள விவசாயிகள் அனைவரையும் கிசான் கடன் அட்டை (KCC) திட்டத்தில் சேர்த்தல், விதைகள் விநியோகம் தொடர்பாகவும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வுஏற்படுத்தப்படுகிறது.

மதுரை கிழக்கு வட்டாரம் சக்கிமங்கலம் வருவாய் கிராம சௌராஷ்ட்ரபுரத்தில் நடைபெற்ற முகாமில் வேளாண்மை உதவி இயக்குநர் பாலமுருகன், வேளாண்மை உதவி இயக்குநர் (துரக்கட்டுப்பாடு) கோ.பரமேஸ்வரன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் இராமகிருஷ்ணன் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# சூலாமலை கிராமத்தில் சீரான உர பயன்பாடு குறித்த பயிற்சி

கிருஷ்ணகிரி, அக்.22

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) கீழ் சூலாமலை கிராமத்தில் வேப்பனப்பள்ளி வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தொடங்கி வைத்து சீரான உர பயன்பாடு மற்றும் உரப்பயன்பாட்டு திறன் குறித்து விளக்கம் அளித்தார்.

இந்த பயிற்சியின் போது, அத்திமுகம், அதியமான் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், உதவி பேராசிரியார் லலித்குமார் பங்கேற்று செயற்கை உரங்களை தவிர்த்து இயற்கை உரங்கள் மூலம் விளைச்சல் அதிகப்படுத்தும் தொழில்நுட்ப முறைகள், மண் பரிசோதனை மூலம் மண்ணில் உள்ள பயிரூட்டங்களின் அளவுகளையும், மண்ணின் நிறைகுறைகளையும் தெரித்து கொண்டு அதற்கேற்ற இரசாயன உரங்களையும், சரியான அளவுகளையும் பரிந்துரைக்கிறது. இதனால் உரச் செலவை கனிசமாக குறைக்க முடியும். மண்ணில் உள்ள களர், உவர் அமிலத்தன்மைகளை கண்டறிய உதவுத்துவதுடன் அதற்கு இடவேண்டிய ஜிப்சம் அளவையும் அமில நிலத்திற்கு இட வேண்டிய சுண்ணாம்பு அளவையும் துள்ளியமாகக் கண்டறிய முடிகிறது. மண்ணில் உள்ள கரையும் உப்புகளின் அளவுகளை கண்டறிந்து, அதற்கேற்ற பயிர்களை தேர்வு செய்து பயிரிட முடிகிறது. உப்பை தாங்கி வளரக்கூடிய சூரிய காந்தி, பருத்தி போன்ற பயிர்களை தேர்வு செய்து பயிரிட முடிகிறது. துணை வேளாண்மை அலுவலர் ராமநாதன், உயிர் உர விதை நேர்த்தி செய்தல், தரமான வீரிய ரகங்களை தேர்வு செய்ய வேண்டும், மற்றும் சொட்டுநீர் பாசன திட்டத்தின் நன்மைகள் பற்றி தெளிவாக கூறினார். இந்த முகாமில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். கலந்துக்கொண்ட விவசாயிகளுக்கு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது.

அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் கவிதா அட்மா திட்ட செயல்பாடுகள் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பாரதிராஜா மற்றும் பிரியா உழவன் செயலியை பயன்படுத்தும் முறைகள் பற்றி விளக்கமளித்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நெல் அறுவடைக்குப் பின் பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்வதன் அவசியம் குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் விளக்கம்



சிவகங்கை, அக்.22

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியத்தில் சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மாணவிகளான பா.மகேஸ்வரி, சு.சந்தியா, செ.யாழினி, க.விவேகா, கு.கீர்த்தனா, செ.சிவ ஸ்ரீ மற்றும் செ.ராஜேஸ்வரி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை (ICM – Integrated Crop Management) குறித்த விவசாயிகள் பயிற்சி முகாமை நடத்தினர்.

இப்பயிற்சியில், நெல் சாகுபடிக்குப் பிறகு உளுந்து, பாசிப்பயறு போன்ற பயறு வகைப் பயிர்களைச் சாகுபடி செய்வதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. ஒரே நிலத்தில் தொடர்ந்து ஒரே பயிரைச் சாகுபடி செய்வதற்குப் பதிலாக, வெவ்வேறு பயிர்களை மாறி மாறிச் சாகுபடி செய்வதன் மூலம் மண்ணின் வளத்தைப் பாதுகாக்கவும், பூச்சி மற்றும் நோய்களின் தாக்கத்தைக் குறைக்கவும் முடியும் என்பது எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், பயறு வகைப் பயிர்களின் வேர்களில் காணப்படும் முடிச்சுகளில் வாழும் ரைசோபியம் நுண்ணுயிரிகளின் செயல்பாடுகள் குறித்து விளக்கப்பட்டது. இந்நுண்ணுயிரிகள் வளிமண்டல நைட்ரஜனைத் தாவரங்கள் பயன்படுத்தக்கூடிய வடிவமாக மாற்றுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதன் மூலம் மண்ணின் நைட்ரஜன் வளத்தை மேம்படுத்தவும், ரசாயன நைட்ரஜன் உரங்களின் தேவையைக் குறைக்கவும் உதவுகின்றன. பயறு வகைப் பயிர்களுக்கு ரைசோபியம் உயிரி உரத்தைக் கொண்டு விதை நேர்த்தி செய்வதன் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்பட்டது. தொடர்ந்து, உளுந்துப் பயிரில் ஏற்படும் பூச்சித் தாக்குதல்கள் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் குறித்துப் பயிற்சி அளிக்கப்பட்டது. வயலைத் தொடர்ந்து கண்காணித்தல், பூச்சிகளின் ஆரம்பகட்டத் தாக்குதலைக் கண்டறிதல், மஞ்சள் மற்றும் நீல ஒட்டும் பொறிகளைப் பயன்படுத்துதல், இயற்கை முறையிலான பூச்சிக் கட்டுப்பாட்டு வழிமுறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றின் அவசியம் குறித்து விளக்கப்பட்டது.

மேலும், பயிர் சுழற்சி, உயிரி உரங்களின் பயன்பாடு மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை ஆகியவற்றை ஒருங் கிணைத்துச் செயல்படுத்துவதன் மூலம் சாகுபடிச் செலவைக் குறைக்கவும், மண்ணின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும், நிலையான மகசூலைப் பெறவும் முடியும் என்பது விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயிற்சியின் மூலம், நெல் அறுவடைக்குப் பின் பயறு வகைப் பயிர்களைச் சாகுபடி செய்வதன் நன்மைகள், ரைசோபியம் உயிரி உரத்தின் பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பூச்சிக் கட்டுப் பாட்டு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத் தப்பட்டது. இதன் மூலம் இயற்கை வளங்களைப் பாதுகாத்து, நிலையான வேளாண்மையை மேம்படுத்துவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

## விதை விற்பனையாளர்கள் விதை தரம் அறிந்து நல்ல தரமான விதைகளை விற்பனை செய்ய வேண்டும்

நாகப்பட்டினம், அக்.22

அதிக விளைச்சலுக்கு நல்ல தரமான விதைகளே ஆதாரம். எனவே நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட விதை விற்பனையாளர்கள் தாங்கள் விற்பனை செய்யக்கூடிய விதைகள் தரமானதாக உள்ளதா என்பதை உறுதி செய்த பின்னரே விதைகளை விற்பனை செய்ய வேண்டும்.

விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள விதைகள் நல்ல முளைப்புதிறன் உள்ளதா என்பதை அறிந்து கொள்ள தங்கள் வசம் உள்ள விதைகளில் ஒவ்வொரு குவியலுக்கும் 100 கிராம் என்ற அளவில் மாதிரிகள் எடுத்து, விதை மாதிரிகளுடன் தங்கள் பெயர், முகவரி மற்றும் பகுப்பாய்வு கட்டணம் ரூ.80 ஐ மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், ஒருங்கிணைந்த விதை சான்றளிப்பு மற்றும் உயிர்ம சான்றளிப்பு வளாகம், மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம், நாகப்பட்டினம் என்ற முகவரியில் இயங்கி வரும் விதை பரிசோதனை நிலையத்தில் கொடுத்து ஆய்வில் தேர்ச்சி பெற்ற விதைகளை மட்டுமே விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும் என நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை அலுவலர் து.சிவவீரபாண்டியன் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் அ.அமுதாதேவி, செ.பிரசன்னா தெரிவித்துள்ளனர்.

# மன்னார்குடி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் RAWE மாணவர்கள் களப் பயணம்



திருவாரூர், அக்.22

கிராமப்புற வேளாண் அனுபவக் கல்வித் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் (Agriculture College and Research Institute, Keezhvelur) இறுதி ஆண்டு மாணவர்கள், மன்னார்குடி வட்டாரத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு (Milk Society) கல்விப் பயணமாகச் சென்றனர். இப்பயணத்தின் போது, அங்கு பணிபுரியும் பணியாளர் தேவி, இச்சங்கத்தின் வரலாறு, அன்றாடச் செயல்பாடுகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து மாணவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழ்நாட்டின் முதல் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கமான இது, கடந்த 1938 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1939 ஆம் ஆண்டில் சுவாமிநாதன் கோத்தனார் என்பவரால் நிறுவப்பட்டது. நவீன இயந்திரங்களைச் சார்ந்திருக்காமல் மனித ஆற்றலை மட்டுமே (Only Manpower) பயன்படுத்தி இச்சங்கத்தை மிகச் சிறப்பாக நடத்தி வந்ததற்காக, கடந்த 2022-23 ஆம் ஆண்டில் சர்வதேச அளவிலான ‘குளோபல் ரத்னா விருது‘ (Global Ratna Award) வழங்கி கௌரவிக்கப்பட்டது. இச்சங்கத்தின் மூலம் 15 கி.மீ சுற்றளவில் உள்ள 132 கிராமங்களைச் சேர்ந்த 159 மையங்கள் வழியாக நாளொன்றுக்குச் சுமார் 30,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் பால் Bulk Milk Cooler (BMC) அலகிற்கு மாற்றப்பட்டு 4°C வெப்பநிலையில் குளிர்விக்கப்பட்ட பின் சென்னை ஆவின் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், இச்சங்கத்தின் மூலம் 50 கிலோ கால்நடைத் தீவன மூட்டை ரூ.1,650-க்கு வழங்கப்படுவதுடன், செயற்கைக் கருவூட்டல் (சினாய் ஊசி) சேவைகளும், நடப்பாண்டில் தீவனப் புல் விதை களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கால்நடைகள் இறக்கும் பட்சத்தில் Animal Death Fun மூலம் ரூ.10,000 முதல் ரூ.15,000 வரையிலும், ஆவின் காப்பீடு மூலம் ரூ.40,000 வரையிலும் நிவாரணம் அளிக்கப்படுகிறது. அத்துடன் சங்க உறுப்பினர்களுக்கு ரூ.25,000 நிதியுதவியும், விபத்து மரணம்

சம்பவித்தால் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.4 லட்சம் வரை நிதியுதவியும் வழங்கப்படுகிறது. பாரம்பரிய சிறப்பும் சர்வதேச அங்கீகாரமும் பெற்ற இச்சங்கத்தின் செயல்பாடுகள், கீழ்வேளூர் வேளாண் கல்லூரி RAWE மாணவர்களுக்குச் சிறந்த கள அனுபவமாக அமைந்தது.

# நவீன இயந்திரம் மூலம் ஐந்து வகை நெல் ரகங்கள் நடவு வேளாண் மாணவர்கள் கள ஆய்வு



திருவாரூர், அக்.22

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், நாராயணமங்கலம் கிராமத்தில் விவசாயி ஒருவரின் வயலில் ஐந்து வகையான நெல் ரகங்கள் நவீன இயந்திரத்தின் மூலம் நடவு செய்யப்பட்டன. இந்நிகழ்வில் பங்கேற்ற வேளாண் கல்லூரி மாணவர்கள் இயந்திர நடவு முறையை நேரில் பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் மற்றும் நன்மைகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டனர்.

இந்தக் களப்பயிற்சியின்போது, ஐந்து வகையான நெல் ரகங்களை இயந்திரத்தின் மூலம் நடவு செய்யும் முறை, நாற்றுகளை இயந்திரத்தில் பொருத்தும் விதம், நடவு இடைவெளி மற்றும் சீரான நடவு முறைகள் குறித்து மாணவர்கள் அறிந்து கொண்டனர். மேலும், இயந்திர நடவு முறையின் மூலம் குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில் நெல் நடவு செய்ய முடியும் என்பதையும், தொழிலாளர் தேவையைக் குறைத்து சாகுபடிச் செலவைக் கட்டுப்படுத்த முடியும் என்பதையும் மாணவர்கள் தெரிந்து கொண்டனர். ஐந்து வகையான நெல் ரகங்களை நடவு செய்வதன் மூலம் அவற்றின் வளர்ச்சி, பயிர் பண்புகள் மற்றும் மகசூல் வேறுபாடுகளை எதிர்காலத்தில் ஒப்பிட்டு அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதுபோன்ற கள ஆய்வுகள் மூலம் நெல் சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்த நடைமுறை அறிவைப் பெற முடிகிறது.

இந்தக் களப்பயிற்சியில் பங்கேற்ற வேளாண் மாணவர்கள், இயந்திர நடவு முறையின் முக்கியத்துவம் மற்றும் நவீன வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதால் விவசாயிகளுக்குக் கிடைக்கும் நன்மைகள் குறித்து விரிவாக அறிந்து கொண்டனர். இந்நிகழ்வு, வேளாண் மாணவர்களின் செய்முறை அறிவை மேம் படுத்துவதுடன், நவீன நெல் சாகுபடி முறைகளை விவசாயத்தில் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.

# நீடாமங்கலத்தில் திரவ உயிர் உரங்கள் தயாரிப்பை விவரித்த வேளாண் கல்லூரி மாணவிகள்




திருவாரூர், அக்.22

கீழ்வேளூரில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் மாணவிகள் திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் உள்ள திரவ உயிர் உரங்கள் உற்பத்தி மையத்தினை பார்வையிட்டனர். இம்மையத்தில் 9 வகையான திரவ உயிர் உரங்கள் தயாரிக்கப்படுகின்றன. ரைசோபியம், அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா போன்ற திரவ உயிர் உரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

**தாய் வளர்ப்பு (Mother Culture) :** தரமான Azospirillum தாய் வளர்ப்பைத் தேர்ந்தெடுத்து, அதன் தூய்மையை உறுதிப்படுத்த வேண்டும்.

**ஊடகம் தயாரித்தல் (Medium Preparation) :** அசோஸ்பைரில்லம் வளர்ச்சிக்குத் தேவையான திரவ ஊடகத்தை (Liquid Medium) அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பு முறையின்படி தயாரிக்க வேண்டும். **காலம் :** 30–60 நிமிடங்கள் (தயாரிப்பு அளவைப் பொறுத்து மாறும்).

**கிருமி நீக்கம் (Sterilization) :** ஊடகம் மற்றும் நொதிப்பானை (Fermenter) உரிய முறையில் கிருமிநீக்கம் செய்ய வேண்டும். **காலம் :** பொதுவாக 20 – 30 நிமிடங்கள். முழுச் செயல்முறையின் காலம் கருவி மற்றும் அளவைப் பொறுத்து மாறும்.

**விதை வளர்ப்பு (Seed Culture Preparation) :** தாய் வளர்ப்பைச் சிறிய அளவு ஊடகத்தில் வளர்த்து, தூய்மையை உறுதிப்படுத்த வேண்டும். **காலம் :** சுமார் 24–48 மணி நேரம். உண்மையான காலம் பயன்படுத்தும் திரிபைப் (Strain) பொறுத்தது.

**நொதித்தல் (Fermentation) :** விதை வளர்ப்பைத் தயாரிக்கப்பட்ட திரவ ஊடகத்தில் சேர்த்து, பொருத்தமான வெப்பநிலை, pH, காற்றோட்டம் மற்றும் கலக்குதல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். **காலம் :** சுமார் 24–72 மணி நேரம் அல்லது அதற்கு மேல். இது திரிபு மற்றும் உற்பத்தி முறையைப் பொறுத்து மாறும்.

**தரப் பரிசோதனை (Quality Control) :** நுண்ணுயிர்களின்

எண்ணிக்கை, தூய்மை, pH மற்றும் மாசுபாடு ஆகியவற்றைப் பரிசோதிக்க வேண்டும். **காலம்** : பரிசோதனை முறையைப் பொறுத்து மாறும்.

**பொதியிடுதல் (Packaging) :** தரப் பரிசோதனையில் தேர்ச்சி பெற்ற திரவ உயிர் உரத்தைச் சுத்தமான, பொருத்தமான பாட்டில்களில் நிரப்பி மூட வேண்டும். **காலம்** : உற்பத்தி அளவைப் பொறுத்து மாறும்.

**சேமித்தல்** (Storage) : தயாரிப்பு விவரங்கள், தொகுதி எண், தயாரிப்பு மற்றும் காலாவதி தேதிகளைப் பதிவு செய்து, பரிந்துரைக்கப்பட்ட சூழலில் சேமிக்க வேண்டும்.


